දුරකථන
தொலைபேசி
Telephone } 94-11-2484637

අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் நாயகம்
Director General } 94-11-2484614

ෆැක්ස්
பெக்ஸ்
Fax } 94-11-2431458

# රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව
# அரச நிதித் திணைக்களம்
# DEPARTMENT OF PUBLIC FINANCE

මහා භාණ්ඩාගාරය
பொதுத் திறைசேரி
General Treasury

මහලේකම් කාර්යාලය (1වෙනි මහල)
செயலகம் (1ம் மாடி)
The Secretariat (1st Floor)

කොළඹ-01
கொழும்பு-01
Colombo-01

ඊමේල්
ஈமெயில்
E-Mail } pubfin@pfd.treasury.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. PF/FS/01/1 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2008.09.17 |

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 432

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள்
மற்றும் அதிகார சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

## அரச நிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் தகவல்கள் இணையத் தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளல் மற்றும் "திறைசேரிச் சுற்றறிக்கைக் கடித இல. நிதி" மற்றும் "அரச நிதிச் சுற்றறிக்கை" அறிவுறுத்தல்களின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் வெப் தளத்தில் (www.treasury.gov.lk) காண்பிக்கப்பட்டுள்ள திணைக்களங்களின் கீழான அரச நிதித் திணைக்களத்திற்குரிய வெப் தளம் (www.treasury.gov.lk/FPPFM/pfd) 2008.10.01 ஆம் திகதி தொடக்கம் பின்வரும் செயன்முறைகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

### 01. அரச நிதி மற்றும் கொள்வனவு சுற்றறிக்கைகள் வெளியீடல்

i. அரச நிதித் திணைக்களத்தினால் 2007.01.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் இந்த வெப் தளத்தில் வருட தொடர்வரிசையில் உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் அதேபோன்று வருடத்தின் பிரகாரம் கால முறைப்படி காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. 1995.01.01 ஆம் திகதி தொடக்கம் 2006.12.31 ஆம் திகதி வரை அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. அவ்வாறு மீளாய்வுக்குட்பட்ட பின்னர் அச் சுற்றறிக்கைகளினால் தற்காலத்துக்கு உரித்துடையதாகும் மற்றும் மேலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சுற்றறிக்கைகள் எதிர்காலத்தில் வருட ரீதியாக இந்த வெப் தளத்தில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. அவ்வாறே, 1995.01.01 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு தேவையான திருத்தங்களுடன் புதிய சுற்றறிக்கையாக வெளியிடப்பட்டு மேலே கூறப்பட்ட வெப் தளத்திற்கு எதிர்காலத்தில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

iv. 2008.03.17 ஆம் திகதியுடைய இல. PF/429 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தின் நடவடிக்கைகள்

முடிவடைதல் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் அரச நிதித் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்படல் காரணமாக 2008 பெப்ரவரி 29 ஆம் திகதி வரை அப்போது நிலவிய தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளும் இந்த வெப் தளத்தில் சுற்றறிக்கைகளின் கீழ் வேறாக காண்பிக்கப்பட்டுள்ளன. தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் அரச நிதித் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளாகக் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

v. 2008.02.29 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுடன் தொடர்புடைய திருத்தங்கள் அல்லது கொள்வனவு நடைமுறைகளுக்கு உரித்துடைய புதிய சுற்றறிக்கைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் போது அச்சுற்றறிக்கைகள் அரச நிதிச் சுற்றறிக்கைகளாக மேற்கூறப்பட்ட வெப் தளத்தில் காண்பிக்கப்படும்.

02. **நிதி ஒழுங்கு விதி மற்றும் கொள்வனவு வழிகாட்டல் விதிக்கோவை மற்றும் கொள்வனவு நடைமுறைக்கோவை போன்ற வெளியீடுகள்.**

i. அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் வெளியிடப்படும் வெளியீடுகள் அரச நிதி வெளியீடுகளின் கீழ் வெப் தளத்தில் காண்பிக்கப்படும்.

ii. அப்போது நிலவிய தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் 2008.02.29 ஆம் திகதி வரை வெளியிடப்பட்ட சகல வெளியீடுகளும் இந்த வெப் தளத்தில் தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தின் வெளியீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வெளியீடுகள் இத்திணைக்களத்தின் வெளியீடுகளாக மேலே 1 (iv) ஆம் பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை (PF/429) இன் பிரகாரம் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

iii. தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தின் மூலம் 2008.02.29 ஆம் திகதி வரை வெளியிடப்பட்ட கொள்வனவு வழிகாட்டல் விதிக்கோவை அல்லது விடய விதிக் கோவை சம்பந்தமாக ஏதேனும் திருத்தங்கள் செய்யப்படுமாயின், அத்திருத்தங்கள் அரச நிதித் திணைக்களத்தின் வெளியீடுகளின் கீழ் காண்பிக்கப்படும்.

03. இத்திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கம் மற்றும் இலத்திரனியல் அஞ்சல் பற்றிய தகவல்கள் உங்களது வசதிக்காக இந்த வெப் தளத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

04. தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தின் பெயரில் செயற்பட்ட www.npa.gov.lk வெப் தளம் 2008.10.01 ஆம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் தயவு செய்து கவனிக்கவும்.

05. திறைசேரியினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் பொருள்கோடல்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு திறைசேரிச் செயலாளரினால் 2007.06.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதத்தின் 4 ஆம் பந்தியின் மீது உங்களது கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். அதன்பிரகாரம், அரச நிதித் திணைக்களத்துக்கு உரித்துடைய கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட "திறைசேரிச் சுற்றறிக்கைக் கடித இல. நிதி" யின்கீழ் அல்லது "அரச நிதிச் சுற்றறிக்கை" யின் கீழான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள்) மற்றும் எதிர்காலத்தில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் செல்லுபடியாகும் தன்மையை அத்திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு. டீ. அபேசூரிய அவர்களிடமிருந்து (தொ.இல. 011-2484734) அல்லது பிரதிப் பணிப்பாளர் திரு. என்.எம்.டீ. நவரத்ன அவர்களிடமிருந்து (தொ.இல. 0112484632) உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

**ஒப்பம்/- எஸ். அபேசிங்க**
**திசைசேரிப் பிரதிச் செயலாளர்**

**பிரதி:** கணக்காய்வாளர் தலைமையதிபதி - அறிந்து கொள்வதற்காக